இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 32 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 26 – வியாழக்கிழமை 11 செப்டம்பர் 2025 – சென்னை 20 + 12 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 84 - Issue 32: Thiruvalluvar Year - 2056 - Aavani 26 - Thursday 11 September 2025 - Chennai 20+12 Pages ₹ 5.00


## ஓசூர் – கிருஷ்ணகிரியில் ‘ரோடு ஷோ!’ – இன்று

# ஓசூரில் முதலீட்டாளர்கள் மாநாடு! முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (10.9.2025) சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் நடைபெற்ற “காவலர் நாள் விழா – 2025” இல், காவலர் நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், காவல் துறை தலைமை இயக்குநர் (பொறுப்பு) க. வெங்கடராமன், சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ. அருண் உள்ளிட்ட காவல்துறை உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கிருஷ்ணகிரியில் முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்தும்; புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் முதல்வர் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்!

ஓசூர், செப். 11 -

**கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு இரண்டு நாள் பயணம் மேற்கொள்ளும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஓசூரில் இன்று நடை பெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார். தொடர்ந்து ஓசூர், கிருஷ்ணகிரியில் நடை பெறும் ‘ரோடு ஷோ’வில் பொதுமக்களின் அன்பான வரவேற்பை ஏற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நாளை கிருஷ்ண கிரியில் நடைபெறும் அரசு விழாவில் முடி வுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், பொதுமக்களுக்கு நல உதவிகளை வழங்கியும் முதல்வர் அவர்கள் பேருரை யாற்றுகிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக இன்று (11.09.2025 - வியாழக்கிழமை) கிருஷ்ணகிரி மாவட்டத் திற்கு வருகை தருகிறார்.

காலை 11 மணிக்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் ஓசூர் பேள கொண்டப்பள்ளியில் உள்ள தனேஜா விமான ஒடு தளத்தை வந்தடைகிறார். அங்கு அவருக்கு கட்சி நிர்வாகிகள் வர வேற்பு அளிக்கிறார்கள். தொடர்ந்து ஓசூ ரில் தளி சாலையில் உள்ள ஆனந்த் கிராண்ட் பேலஸ் சென்றடைகிறார். அங்கு 11.30 மணிக்கு நடைபெறக் கூடிய தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

தமிழ்நாடு அரசு ஏற்கனவே தூத்துக்குடி மாவட்டத்தை மையமாக கொண்டு ஒரு முதலீட்டாளர் மாநாட்டை நடத்தியது. இதன் அடுத்த கட்டமாக

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்


